வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  23.06.2025 திங்கட்கிழமை  இதழ் : 174  பக்கங்கள் : 12




### செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி

# அணையா விளக்கு போராட்டம் இன்று!

யாழ்ப்பாணம், ஜூன் 23

**செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி கோரியும் சர்வதேச கண்காணிப்புடன் இந்த மனிதப் புதைகுழி அகழப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் 'அணையா விளக்கு' போராட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.**

செம்மணி வளைவு பகுதியில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும். இந்தப் போராட்டம் தொடர்ந்து 3 நாட்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. 'மக்கள் செயல்' என்ற தன்னார்வ இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

போராட்டம் நடைபெறும் நாட்களில் புதைகுழியின் வரலாற்றை இளம் சந்ததியினருக்கு கடத்தும்விதமாக செம்மணி புதைகுழி தொடர்பான புகைப்பட கண்காட்சி, நாடக ஆற்றுகைகள் என்பனவும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் ஆரம்பமாகும் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் எனப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இன்றைய தினம் நாட்டுக்கு வருகை தரவுள்ளார். யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரும் அவர் செம்மணி மனித புதைகுழியையும் பார்வையிடவுள்ளார். இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (ஐ)

## சகலரும் போராட்டத்தில் அணிதிரள வேண்டும்!

### யாழ். பல்கலை மாணவர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

செம்மணியில் இன்றைய தினம் ஆரம்பமாகும் 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு தமிழர் தேசமாக அனைவரும் அணிதிரளவேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன், சிவில் சமூக அமைப்புகள் இணைந்து அணையா விளக்கு என்ற போராட்டத்தை மனித புதைகுழிக்கு சர்வதேச நீதிவேண்டி முன்னெடுக்கவுள்ளன. இதில், நாங்கள் ஒரு பங்காளராக

11

### செம்மணிக்கு நீதி கோரி

## மட்டக்களப்பில் இன்று தீப்பந்த போராட்டம்!

மட்டக்களப்பு, ஜூன் 23

செம்மணியில் இன்று ஆரம்பமாகும் அணையா விளக்கு போராட்டத்துக்கு ஆதரவாக மட்டக்களப்பிலும் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரியும், நாட்டுக்கு வருகைதரும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கவனத்தை ஈர்க்கவும் செம்மணியில் இன்றைய தினம் அணையா விளக்கு போராட்டம்

11

## இன்று நாட்டுக்கு வருகிறார் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்!

கொழும்பு, ஜூன் 23



அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இன்று திங்கட்கிழமை நாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

இன்றைய தினம் நாட்டுக்கு வருகை தரும் அவர் எதிர்வரும் வியாழக் கிழமைவரை நாட்டில் தங்கியிருப்பார். இதன் போது, அவர் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் வருகை தரு வார். யாழ்ப்பாணம் வரும் அவர் அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தில் அகழப்படும் மனித புதைகுழியையும்

11

### ஹார்மூஸ் நீரிணை மூடப்படுகிறது

## எரிபொருள்களின் விலை அதிகரிப்பதற்கு வாய்ப்பு!

நியூயோர்க், ஜூன் 23

ஈரான் - இஸ்ரேல் போரைத் தொடர்ந்து உலக கச்சா எண்ணெய் போக்குவரத்தின் முக்கிய பங்காக உள்ள ஹார்மூஸ் நீரிணையை மூட ஈரான் முடிவு செய்துள்ளது. இதற்கு அந்த நாட்டு பாராளுமன்றமும் அனுமதியளித்துள்ளது.

இதனால், பெற்றோல் உட்பட சகல எரிபொருட்களின் விலைகளும் அதிகரிக்கும்

11

## கஞ்சா கலந்த மாவாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 23

கஞ்சா கலந்த மாவா பாக்கு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியை சேர்ந்த நபர்

11

## வோல்கர் டர்க் செம்மணிக்கு செல்வதற்கு தடையில்லை!


### வெளிவிவகார அமைச்சர் விஜித

கொழும்பு, ஜூன் 23

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி (அரியாலை) மனித புதைகுழியை பார்வையிடவும், மக்களை சந்திக்கவும் தடையற்ற அனுமதி வழங்கப்படும் - என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

"கடந்தகால மனித உரிமைகள் மீறலைக் கையாள்வது குறித்த நாட்டின்

11



## யாழ்ப்பாணத்தில் நேற்று திடீர் காற்றும் மழையும்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை திடீரென கடும் காற்றுடனான மழை வீழ்ச்சி பதிவானது.

கடும் காற்றால் பல இடங்களில் மரங்கள், மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. அத்துடன், மின்சாரமும் சில இடங்களில் தடைப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த கடும் காற்றுடன் கூடிய மழையால் மக்கள் பெரும் சிரமங்களையும் பாதிப்புகளையும் எதிர்கொண்டனர்.

இதனிடையே, நேற்றைய தினம் யாழ். நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சியும் இடைநிறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலுசக்தி உற்பத்தி திட்டத்துக்கு 15 கோடி டொலர்கள் நிதியுதவி

### உலக வங்கி வழங்குகிறது

கொழும்பு, ஜூன் 23

நாட்டில் தூய, தரமான, குறைந்த செலவிலான வலுசக்தி உற்பத்தி செயல் திட்டத்தை முன்னெடுப்பதற்காக 15 கோடி டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய்) நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கி குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

"இந்த செயல்திட்டத்தின் மூலம் குறைந்த செலவில் பாதுகாப்பானதும் நிலைபேறானதுமான

11

## எதிர்க்கட்சிகளின் பலத்தால் அரசு அமைதியற்ற நிலையில்!

### எதிர்க்கட்சி சொல்கிறது

கொழும்பு, ஜூன் 23

உள்ளூராட்சி சபைகளில் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள் பலம் பெற்றமையால் அரசாங்கம் அமைதியற்ற நிலையில் இருக்கிறது. எதிர்க்கட்சியின் வெற்றிக்கு பதிலளிக்கும் விதமாக தேர்தல் செயல்முறையை மாற்றும் முயற்சிகளில் இப்போது ஈடுபட்டுள்ளது

11

## நிர்வாகத்துக்குள் என்ன நடக்கிறது என்று ஜனாதிபதிக்கு தெரியவில்லை

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

"ஜனாதிபதி முழுமையான குழப்ப நிலையில் இருக்கிறார். தனது சொந்த நிர்வாகத்துக்குள் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியாது", என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்நிய முதலீடுகள் தொடர்பிலேயே சிறீலங்கா பொதுஜன பெரமுன பெரமுனவின்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு ஐ. நா. அமைப்பு விருது வழங்கல்

கொழும்பு, ஜுன் 23

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பினரால் 'தேசாபிமானி' என்னும் விருதும் மனித உரிமைகளுக்கான மாகாண இயக்குநர் என்ற பதவியும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

கொழும்பு அருங்காட்சியகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது. (எ-02-05)

## காணிகளை விடுவிக்க வலியுறுத்தி இரண்டாவது நாளாகவும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

வலி. வடக்கிலுள்ள 2 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக்கோரிய தொடர் போராட்டம் மயிலிட்டி சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி குறித்த அமைதிவழி தொடர் போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நெடுந்தீவு பெருக்கடி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஜுன் 23

நெடுந்தீவு பெருக்கடி சிறீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றம் நடைபெறும்.

பத்து நாள் பெருந்திருவிழாவில் எட்டாம் நாளான 30ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், 9ஆம் நாளான செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர் திருவிழாவும் மறுநாள் ஆனி உத்தர தினமான புதன்கிழமை காலை 8 மணிக்கு மணல் துறையில் சமுத்திர தீர்த்தமும் நடைபெறும்.

ஜுலை 3ஆம் திகதி வியாழக்கிழமை மாலை பூங்காவன திருவிழா நடைபெற்று, மறுநாள் வைரவர் மடை நடைபெறும்.

பதினொரு தினங்களும் மதியம் அன்னதானம் வழங்கப்படும். (ஐ)

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் ரவிகரனுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜுன் 23

சட்டவிரோத கடற்றொழில்களை கட்டுப்படுத்துவது தொடர்பில், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சமேளனம், யாழ். மாவட்ட கிராமிய சம்மேளனம் என்பவற்றின் பிரதிநிதிகள் நேற்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரனை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, முல்லைத்தீவின் தீர்த்தக்கரையில் அதிகரித்துள்ள சட்டவிரோத மீன்பிடி குறித்தும், அண்மையில் காணாமல் போன மீனவர் தொடர்பான விடயமும் ஆராயப்பட்டன.

சட்டவிரோத கடற்றொழில் செயல்பாடுகளை முற்றாக தடை செய்வதுதொடர்பில் தம்மாலான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மீனவ பிரதிநிதிகளுக்கு ரவிகரன் எம். பி. உறுதியளித்திருந்தார். (ஐ)

## காட்டு தடிகளை வெட்டி ஏற்றிச்சென்றவர் கைது!

கிளிநொச்சி, ஜுன் 23

விசுவமடுவிலிருந்து காட்டுத் தடிகளை அனுமதியின்றி வெட்டி வேறு பகுதிக்கு கப்ரக வாகனத்தில் கொண்டு சென்றவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸார் நடத்திய வீதி சோதனையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## யாழ். உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ். மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் யாழ். சமூக செயல்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 15 பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன், யாழ். மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா, வெற்றி பெற்ற உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜுன் 23

கார் ஒன்றை முந்திச் செல்ல முயன்ற எரிவாயு சிலிண்டர்களை கொண்டு சென்ற வாகனம் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி, ஏ-9 வீதியில் 155ஆம் கட்டை பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 33 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார். அவருடன், பயணித்த மற்றொருவர் படுகாயமடைந்தார்.

விபத்து தொடர்பில் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## உயர்தர பரீட்சையில் சிறப்பு சித்தி 300 மாணவர்களுக்கு கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜுன் 23

கடந்த 2023ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் விசேட சித்திகளை பெற்ற வடக்கு மாகாணத்தை சேர்ந்த 300 மாணவர்கள் ஜனாதிபதி நிதியத்தால் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

கடந்த 2023 - 2024ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட் சையில் மாவட்ட மட்டத்தில் உயர் திறமைகளை வெளிப் படுத்திய சிறந்த மாணவர்களை கௌரவிக்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதி நிதியத்தால் நடை முறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக வடக்கு மாகாணத்தில் 2023 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இரணைமடு நெலும் பியச கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் 2023ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் உயர் சித்தி பெற்ற முதல் 10 மாணவர்கள் வீதம், ஒரு மாவட்டத்தில் இருந்து 60 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு 300 மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இதற்காக ஜனாதிபதி நிதியம் 3 கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர், ஜனாதிபதியின் செயலாளர், நந்திக சனத் குமாநாயக்க, வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் எனப் பலர் பங்கேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.06.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கூட்டமைப்பாக செயல்படுதல்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாகாண சபைகள் தேர்தலில் கூட்டமைப்பாக செயல்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். ஓர் ஐக்கிய முன்னணியாக இணைவது காலத்தின் தேவைதான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்கமுடியாது. ஆனால், அந்த இணைவு மக்களின் நலன்களை பாதுகாப்பதாக இருக்க வேண்டும். மாறாக, ஒரு சிலரின் கதிரைகளுக்கானதாக இருக்கக்கூடாது. 2009இல் போர் முடிவுற்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் ஒரேயொரு முதன்மையான அரசியல் கூட்டாக இருந்தது.

முதலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. பின்னர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியேறியது. இந்த சடுகுடு ஆட்டத்தில், இறுதியாக இலங்கை தமிழ் அரசு கட்சி உள்ளூராட்சித் தேர்தலை முன்வைத்து தனியாகப் போட்டியிடும் முடிவை எடுத்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கதை முடிவுக்கு வந்தது. அதுவரையில் வீட்டுக்குள் இருந்த ரெலோவும் புளொட்டும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக மாற வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது.

இந்தக் காலத்தில் ரெலோவுக்குள்ளும் ஓர் உடைவு ஏற்பட்டது. வெளியேறியவர்கள் தாங்களை ஒரு தனியான கட்சி என்று அடையாளப்படுத்துகின்றனர். திரும்பிப் பார்த்தால் தமிழ்த் தேசிய அரசியல் ஒரு நல்ல நகைச்சுவை படத்தை பார்க்கும் குதூகலத்தைத் தரக்கூடும். ஓர் இனத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சிகள், இயக்கங்கள் என்பவை இன்று வெறும் கதிரைகளுக்கான கூட்டுகள் தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றன.

இன்று மாகாண சபைகள் தேர்தலில் கூட்டமைப்பாகப் போட்டியிட வேண்டும் என்று கூறும் செல்வம் அடைக்கலநாதனோ அன்று, கூட்டமைப்பிலிருந்து மற்றவர்கள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது அவர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. இறுதியில் வீட்டுச் சின்னம் இல்லையென்னும் நிலைமை ஏற்பட்டபோதுதான் வெளியிலிருந்தவர்களையும் தங்களுடன் இணைத்துக் கொள்ளும் முடிவை எடுத்தனர். 2009இற்கு பின்னரான அரசியல் சூழல் முற்றிலும் தேர்தல் நலன்களோடு மட்டும் கட்டுண்டு கிடப்பதுதான் அடிப்படையான பிரச்னை. தேர்தல் நலன்கள் ஒரு கட்சிக்கு இருக்கக்கூடாதென்று எதிர்பார்ப்பது தவறானதல்ல. அதேபோன்று, வெறும் தேர்தல் கணக்குடன் மட்டும் தங்களின் அரசியல் நகர்வுகளை சுருக்கிக் கொண்டிருப்பது தவறானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தன் தலைமையில் இருக்கின்றபோதே ஏனைய கட்சிகளுக்கான இடம் தொடர்பிலான உரையாடல் ஆரம்பித்துவிட்டது. ஏனைய கட்சிகள் மதிக்கப்படுவதில்லை என்னும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அன்றைய சூழலில் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால், அந்த விடயத்தில் ஆரம்பத்திலிருந்தே இலங்கை தமிழ் அரசு கட்சி எதிர்மறையான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது.

அன்றைய சூழலில் ஏனைய அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும். இல்லையென்றால் நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு பதிவு செய்வோம் என்னும் தீர்மானத்துக்கு வந்திருந்தால் ஒன்றில் தமிழ் அரசு கட்சி இறங்கி வந்திருக்கும். இல்லையேல், அப்போதே வெளியேறியிருக்கும். ஆனால், ரெலோ அப்போது அவ்வாறான முடிவுக்கு தயாராக இருக்கவில்லை. தேர்தல் வெற்றிக்கு வீட்டுச் சின்னம் தேவை என்னும் எண்ணத்தில் உறுதியாக இருந்தது. ஆனால், பின்னர் வீட்டுச் சின்னம் இனி இல்லை என்னும் நிலைமை வந்தபோதுதான் மாற்று வழிமுறை தொடர்பில் ஆராயும் தரப்போடு இணைந்து கொண்டது.

இன்றும் தேர்தல் வெற்றி குறித்த அச்சம் காரணமாகவே கூட்டமைப்பு தொடர்பான எண்ணம் துளிர்விடுகிறது. இதுதான், தமிழ் கட்சிகளின் பிரச்னை. தங்களுக்குத் தேவை என்னும்போது கூட்டமைப்பு தொடர்பில் அழுவதும் பின்னர், தங்கள் தேவை முடிந்தவுடன் அனைத்தையும் புறந்தள்ளிவிட்டுச் செல்வதும் தொடர்கிறது. இதுதான், வெறும் தேர்தல் நலனுக்காக சிந்திப்பது என்பதன் பொருளாகும். தமிழ் கட்சிகள் எப்போது தங்களின் குறுகிய தேர்தல் நலன்களை புறந்தள்ளி சிந்திக்கின்றனவோ அதுவரையில் இந்த விடயத்தில் மாற்றம் இருக்கப் போவதில்லை. ஒரு சிலர் தங்களின் கதிரைகளை காப்பாற்றிக் கொள்வதில் வெற்றிபெறுவர். ஆனால் ஏழைத் தமிழர்களோ தொடர்ந்தும் பலியாடுகளாக வெட்டப்பட்டுக் கொண்டேயிருப்பர்.

*அதிகார துஷ்பிரயோகம்:*

# மன்னார் சுகாதாரப் பணிப்பாளருக்கு எதிராக இதுவரை 30 பேர் முறைப்பாடு

வவுனியா, ஜூன் 23

மன்னார் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் வினோதனின் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் முறைப்பாடு செய்துள்ளனர் என புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் க. இன்பராசா தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் த. வினோதனின் பழிவாங்கல், அதிகார துஷ்பிரயோகம், பக்கச்சார்பு, முறைகேடு தொடர்பில் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்துகின்றோம்.

அவர் 2019 ஆம் ஆண்டு முதல் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக பணியாற்றி வருகிறார். இடையில் சில மாதம் கிளிநொச்சியில் பணியாற்றியவர். இதன்போது மன்னாரில் சிங்கள வைத்தியர் ஒருவர் பொறுப்பாக செயல்பட்டார். இடமாற்றம் செய்த பின்பும் பழிவாங்கும் செயல்பாடுகளை மேற்கொண்டார். மன்னார் மருத்துவமனை தொடர்பில் முகநூலில் பல பதிவுகளை இட்டு மீளவும் மன்னார் வந்தார். தனக்கு பிடிக்காத உத்தியோகத்தர்கள் மீது பழிவாங்கும் செயல்பாடுகளை மேற்கொள்கின்றார்.

13 வருடங்களாக மன்னாரில் பணியாற்றும் பிரியந்தன் என்பவருக்கு இடமாற்றம் வந்தும் அவருக்கு இடமாற்றம் கொடுக்காது அவரை வைத்து சில வேலைகளை செய்து வருகின்றார். இடமாற்றங்கள், இடமாற்ற மேன் முறையீடுகள், வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரால் வழங்கப்படும் இடமாற்றங்களை கூட சில உத்தியோகத்தர்களுக்கு வழங்காது தடுத்து வருகின்றார். சில விடயங்களில் அவர் பக்கச்சார்பாக செயல்பட்டு வருகின்றார். பலருக்கு சம்பளங்களை நிறுத்தி வைத்து பழிவாங்கியதற்கான ஆதாரங்கள் உள்ளன.

நிர்வாக உத்தியோகத்தர் பதவியை தனக்குப் பிடித்த ஒருவருக்கு கொடுத்து விட்டு செயல்பட்டு வருகின்றார். கிழக்கு மாகாணத்திலிருந்து மன்னார் வந்து பணியாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் ஒருவருக்கு மாகாணத்தால் இடமாற்றம் வழங்க அனுமதி வந்தும் அந்தக் கடிதத்தை கூட காட்டாமல் வைத்திருக்கிறார். கடிதம் தனிப்பட்ட ரீதியில் குறித்த குடும்ப நல உத்தியோகத்தருக்கு கிடைத்ததும் பணிப்பாளர் வினோதனிடம் கேட்டபோது தரக்குறைவாக பேசியுள்ளார். இந்த விடயம் கடிதம் மூலம் மாகாணத்துக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகார துஷ்பிரயோகம் செய்து வருகின்றார். இவை தொடர்பில் அனைவருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளோம். - என்றார். (எ)

# மின் உயர்த்தியிலிருந்து விழுந்த இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். பண்ணை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மின் உயர்த்தியிலிருந்து விழுந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞன் என தெரியவந்துள்ளது.

இவர் குறித்த ஹோட்டலில் ஊழியராக பணியாற்றி வந்த நிலையில், பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் மின் உயர்த்தியில் பாதுகாப்பற்ற முறையில் பயணித்த போது விபத்து நேர்ந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# யாழில் குற்றச்செயல்கள் புரிந்த மூவர் தலைமன்னாரில் சிக்கினர்

## இந்தியாவுக்கு தப்பிச்செல்ல முற்பட்டபோது கைது

தலைமன்னார் , ஜூன் 23


யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் புரிந்த மூவர் நேற்று முன்தினம் நள்ளிரவு தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த குறித்த மூவரும் யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, வாள் வெட்டு ஆகிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவரும் தலைமன்னாரிலிருந்து கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முயற்சித்த வேளை கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை தலைமன் னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ- 05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 23 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 09
நல்ல நேரம் :07.30 - 09.00
ராகு காலம் :4.30 - 6.00
திதி: துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**இடபம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து விலக்கும். வாகனத்தை இயக்கும் போது அலைப் பேசியில் பேசவேண்டாம். அதிகம் உழைக்க வேண்டியநாள்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்குவரும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை ஆதங்கப்படுவீர்கள். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தைசீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப் புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள்.

**தனுசு**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில்நல்லவர்கள்யார்என்பதைகண்டறிவீர்கள்.

**மகரம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய இனிய சம்பவங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். பழைய பிரச்னைகள் தீரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

# வவுனியா நகரின் பல பகுதிகளிலும் 18 மணி நேரம் நீர் விநியோகம் தடை

## மக்கள் பெரும் அவதி

வவுனியா, ஜூன் 23

வவுனியா நகரத்துக்குட்பட்ட பல பகுதிகளில் 18 மணித்தியாலங்களுக்கு மேலாக நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

வவுனியா நகரின் சில பகுதிகள், மன்னார் வீதி, குருமன்காடு, அரச விடுதிப் பகுதி உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று முன்தினம் 21ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி முதல் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பால் வழங்கப்படும் நீர் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளது. இதனால், வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், அரச விடுதிகள், வீடுகள் என்பனவற்றில் தமது அன்றாட செயல்பாடுகளுக்கு நீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், வேறு இடங்களுக்கு சென்று நீரை எடுத்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

நகர்ப் பகுதியில் இந்த நீரை நம்பியே பல்வேறு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 18 மணித்தியாலமாக எந்தவித அறிவித்தலும் இன்றி நீர் விநியோகம் தடைப்பட்டதால் அவர்களது இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிறுவர்களும் பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரை தொடர்பு கொண்டு கேட்ட போது, நீர் விநியோக குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், குறித்த வெடிப்பு ரயில் தண்டவாளத்துக்கு கீழ் உள்ள குழாயில் ஏற்பட்டுள்ளதால் புகையிரத திணைக்கள அதிகாரிகள் வருகை தந்த பின்னரே அதனை சீர் செய்ய முடியும் எனவும் அதனால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

(எ-10)

# யாழில் ரூ.1000 மில்லியன் செலவில் வீதி அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1000 மில்லியன் ரூபாய் செலவில் வீதி அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானங்கள் சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முதற்கட்ட பணிகள் நேற்று முன்தினம் தெல்லிப்பழை, காங்கேசன்துறை கல்லூரி வீதியின் புனரமைப்பு மற்றும் பருத்தித்துறை மூன்றாம் வீதியின் புனரமைப்பு வேலைகளுடன் ஆரம்பமாகின.

அந்த வகையில் காங்கேசன்துறை கல்லூரி வீதியின் புனரமைப்புப் பணியின் ஆரம்ப நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஜீவநாதன், அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் குரூஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

(எ-05)

# சகோதரர்கள் மீது வாள்வெட்டு 3 இளைஞர்கள் வாளுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 23


யாழ்ப்பாணத்தில் அணமையில் இடம்பெற்ற வாள் வெட்டு வன்முறைச் சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைது நடவடிக்கையின்போது மூன்று வாள்களும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

உதயபுரம் பகுதியில் சில வாரங்களுக்கு முன்பு சகோதரர்கள் மீது இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போது கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அரியாலை நாயன்மார் கட்டை சேர்ந்த 25, 28, 30 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(எ)






யாழ்ப்பாணம், அராலி மேற்கு சிறீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார வேள்வி உற்சவத்தின் 5ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் முத்துச் சப்பரத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

(படங்கள் :- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பாடசாலைகளிலும் டிஜிற்றல் கல்வி முறைமை!

## பிரதமர் ஹரிணி வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 23

**"அனைத்து பாடசாலைகளிலும் மனித, பௌதிக வளங்கள் திறம்பட பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் அதே வேளை, டிஜிற்றல் கற்றல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்", என பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தியுள்ளார்.**

டிஜிற்றல் கல்வி மாற்றத்தை மேற்பார்வையிட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பணிக்குழுவுடனான சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கல்வித் துறையில் டிஜிற்றல் மாற்றத்தை ஆரம்பித்தல், தொடர்புடைய சவால்களை எதிர்கொள்ளல், தேவையான கொள்கைகளை செயல்படுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய, மாகாண பாடசாலைகளில் தற்போதுள்ள 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் நிவர்த்தி செய்ய வேண்டும். ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக, தற்போதுள்ள வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் கற்றல் இடைவெளியை குறைக்க அடுத்த ஆறு மாதங்களுக்குள் டிஜிற்றல் கற்றல் முறைகளை அறிமுகப்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த பணிக்குழுவின் முதன்மை நோக்கங்களின் கீழ், மாற்றுத்திறனாளிகள் சமூகம் உட்பட அனைத்து பாடசாலைகளுக்கும் வசதிகளை சமமாக விநியோகிப்பதை உறுதி செய்வது அடங்கும். இந்த இலக்கை அடைவதற்கு ஒரு வலுவான பல்துறை பணிக்குழு அவசியம்" என்றார். (ஐ)

# முதலீட்டு வாய்ப்புகளை ஆராய முன்வாருங்கள்!

## சீனா, தெற்காசியாவுக்கு அரசு அழைப்பு

கொழும்பு, ஜூன் 23

உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம், பசுமை சக்தி, விவசாயம், சுற்றுலா, உற்பத்தி உள்ளிட்ட முக்கிய துறைகளில் உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்கு முன்வருமாறு சீனா மற்றும் தெற்காசிய நாடுகளின் முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர அழைப்பு விடுத்துள்ளார்.

சீனாவின் யுனான் மாகாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மேலும், மக்கள்தொகைசார் வலிமை, மூலோபாய அமைவிடம், உலகளாவிய வர்த்தகத்தில் அதிகரித்து வரும் பங்கு, கலாச்சார மற்றும் புலமைச் சொத்துக்கள் ஆகியற்றை




கொண்டுள்ள தெற்காசியாவின் பிராந்திய ஒற்றுமை மற்றும் பகிரப்பட்ட முன்னேற்றதுக்கு இந்த நிகழ்வு முக்கியமானது.

உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம், பசுமை சக்தி, விவசாயம், சுற்றுலா மற்றும் உற்பத்தி உள்ளிட்ட முக்கிய துறைகளில் உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்கு முன்வருமாறு சீனா மற்றும் தெற்காசியாவை சேர்ந்த முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். (ஐ)

# காதலியின் நிர்வாண படங்களை இணையத்தில் பதிவிட்டவர் கைது

கொழும்பு, ஜூன் 23

காதல் உறவில் இருந்த பல்கலைக்கழக மாணவியின் நிர்வாண படங்களை இணையத்தில் வெளியிட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - ஹோமகம பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவர் கைது செய்யப்பட்ட போது, முறைப்பாடு செய்த பெண்ணினதும் வேறொரு பெண்ணினதும் நிர்வாண படங்கள் மற்றும் காணொலிகளை சந்தேகநபர் கைபேசி, மடிக்கணினியில் வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணும் சந்தேகநபரும் பல்கலைக்கழகத்தில் படித்தபோது காதலித்தனர் என்றும் 4 வருட காதலின் பின்னர் சந்தேகநபர் பெண்ணின் நிர்வாண படங்களை வெளியிட்டமையை தொடர்ந்து காதல் உறவை முறித்துக் கொண்டார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# 37 இலங்கையர்கள் ஈரானில் உள்ளனர்

## வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஜூன் 23

மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் மோதல்களுக்கு மத்தியில் ஈரானில் தற்போது 37 இலங்கையர்கள் உள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈரானில் 41 இலங்கையர்கள் தங்கியிருந்த நிலையில் அவர்களில் 4 பேர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இதன்படி, தற்போது ஈரானில் 37 இலங்கையர்கள் இருக்கின்றனர் என்றும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

# கைக்குண்டுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூன் 23

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடனும் 16 கிராம் 360 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கைதானவர் 29 வயது நபராவார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், சந்தேக நபர் பல்வேறு குற்றங்களை செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மோட்டார் சைக்கிள்களை திருடி வழங்குபவர் என்பதும் கரந்தெனிய, எல்பிட்டி, பிடிகல, அ/ஹங்கல்ல மற்றும் கொஸ்கொட பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு அளிக்கப்பட்ட பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# ஆபிரிக்க பன்றி காய்ச்சல் விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 23

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அல்லது ஆபத்துமிக்க பகுதிகளாக அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் வகையில் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவலாவால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அதிவிசேட வர்த்தமானி ஊடாக பன்றிகளும் ஆபத்தான விலங்குகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் நாடு முழுவதும் பல பகுதிகளில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் தொடர்ந்தும் பரவிவருகின்ற நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அதிக ஆபத்துள்ள பன்றிகள், பன்றி இறைச்சி, பன்றி இறைச்சி பொருட்களைப் பாதிக்கப்பட்ட மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளுக்குள் அல்லது வெளியே கொண்டு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தந்த பிரிவுக்கு பொறுப்பான கால்நடை மருத்துவரிடமிருந்து அனுமதி பெறாமல், இறைச்சிக்காக, பாதிக்கப்பட்ட விலங்குகளை கொல்லது அதிக ஆபத்துள்ள விலங்குகளை உள்ளடக்கிய நேரடி சந்தைகளை வைத்திருப்பது தடை செய்யப்படுகிறது என்று வர்த்தமானியில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# இராணுவ அதிகாரிகள் நீக்கம் பரவும் தகவல்கள் தவறானவை

## படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

இராணுவம் தொடர்பாக சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்கள் குறித்து இலங்கை இராணுவம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் அனுமதி இல்லாமல் மோசடியான ஆவணங்கள் மூலம் தனிப்பட்ட காரணங்களுக்காக பல அதிகாரிகள் இராணுவத்திலிருந்து நீக்கப்படுவதாக வரும் தகவல்கள் முற்றிலும் தவறானவை. சமூக ஊடகங்களில் பகிரப்படும் இந்த தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் சிவில் சமூகத்தில் இராணுவத்தை அவதூறு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இராணுவம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)

# எரிபொருள் பவுஸர் மோதி குடும்ப பெண் உயிரிழப்பு

சிலாபம், ஜூன் 23

நடந்து சென்ற பெண்ணை எரிபொருள் பவுஸர் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு புத்தளம் - பாலாவி - கற்பிட்ட வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், ஒரு பிள்ளையின் தாயான அபூதாலிப் பாத்திமா ரிஸானா (வயது 40) என்பவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் புத்தளம் தள மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

எரிபொருள் பவுஸரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாராளுமன்ற பணியாட்களின் உணவு கட்டணம் குறைகிறது!

கொழும்பு, ஜூன் 23

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்ற பணியாட்களின் உணவு கட்டணம் குறைக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற குழுவின் தலைவர் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடிய கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

இதன்படி, பாராளுமன்ற பணிக்குழாமினருக்கான உணவு கட்டணங்களை நிர்வாக தர அதிகாரிக்கு மாதம் 4 ஆயிரம் ரூபாயாகவும், நிர்வாக தரமற்ற ஊழியருக்கு மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாயாகவும் வசூலிக்க பாராளுமன்றகுழு தீர்மானித்துள்ளது.

மே 23 ஆம் திகதி குழுவால் தீர்மானிக்கப்பட்டபடி, பாராளுமன்ற பொது உணவகத்தில் உணவுகளை கொள்வனவு செய்யும், பாராளுமன்ற உறுப்பினர்களின் சாரதிகள், பொலிஸ் அதிகாரிகள், ஜனாதிபதி - பிரதமர் பாதுகாப்புப் படை அதிகாரிகள் ஊடகவியாளாலர்களுக்கும் தற்போது வசூலிக்கப்படும் உணவு கட்டணங்களை மாற்றமின்றி பேணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், நுவரெலியாவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் விடுமுறை இல்லத்தின் ஒரு பகுதியை பாராளுமன்ற ஊழியர்களுக்காக ஒதுக்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எந்த ஆவணங்களுமின்றி 30 கைதிகள் விடுதலை!

கொழும்பு, ஜூன் 23

**சிறையிலிருந்த 30 கைதிகள் எந்த அதிகாரபூர்வ ஆவணங்களும் இல்லாமல் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குற்றப் புலனாய்வு துறை (சி. ஐ.டி.) நடத்தி வரும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.**

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்ற போர்வையில் கைதிகளை சட்டவிரோதமாக விடுதலை செய்தமை தொடர்பில் சி. ஐ. டி. விசாரணை நடைபெற்று வருகிறது. இதன் மூலமே தற்போது இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

பொது மன்னிப்பில் கைதிகளை விடுதலை செய்தமை தொடர்பில் இடைநிறுத்தப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய தற்போது இந்த விவகாரம் தொடர்பாக விளக்கமறியலில் உள்ளார்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் அவர்களின் விடுதலைக்கு பயன்படுத்தப்பட்ட குறிப்பிட்ட காரணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து சி. ஐ. டி. அதிகாரிகள் இப்போது விசாரித்து வருகின்றனர்.

இதற்கு நேர்மாறாக, ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டு இன்னும் விடுவிக்கப்படாத 37 நபர்கள் இன்னமும் சிறைகளில் உள்ளமை தெரிந்ததே. (ஐ)

# துப்பாக்கிச்சூட்டு முயற்சி சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 23

கொழும்பு - மருதானை - பஞ்சிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் மாளிகாவத்தையை சேர்ந்த 30 வயது நபராவார். அவரிடமிருந்து குற்றத்துக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி பஞ்சிகாவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஒருவரை துப்பாக்கியால் சுட முயன்றனர். துப்பாக்கி இயங்காத நிலையில் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் கடந்த 19ஆம் திகதி துப்பாக்கிச்சூட்டை நடத்த முயன்றவர் கைது செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே அவருக்கு உதவியாக மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# பிறந்த சிசுவை மருத்துவமனை குளியலறையில் கைவிட்ட பெண்

சிலாபம், ஜூன் 23

பிறந்து சில மணிநேரங்களிலேயே கைவிடப்பட்ட நிலையில் சிசு ஒன்று சடலமாக மருத்துவமனையின் குளியலறையில் இருந்து மீட்கப்பட்டது.

புத்தளம் மருத்துவமனையின் பெண்கள் விடுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில், அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான பெண் மசாஜ் நிலையம் ஒன்றில் பணியாற்றுபவர் என்றும் 27 வயதுடையவர் என்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைதான பெண் புத்தளம் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் இரகசியமாக குழந்தையை பிரசவித்து அதனை குளியலறையில் வீசியுள்ளார் என்று கூறப்படுகிறது.

பொலிஸார் கைதான பெண்ணிடம் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# நிதி அமைச்சின் செயலாளராக எம்.பி. பதவியை துறந்த ஹர்சன?

கொழும்பு, ஜூன் 23

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்த பதவி விலகல் கடந்த 20ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது என்று பாராளுமன்ற செயலகம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான சூரியபெரும நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சராக பணியாற்றியிருந்தார்.

இந்த நிலையில், நிதி அமைச்சின் செயலாளராக கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேசமயம், நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன அண்மையில் அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்று சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாராளுமன்றம் 30ஆம் திகதி கூடுகின்றது!

கொழும்பு, ஜூன் 23

எதிர்வரும் 30ஆம் திகதியை பாராளுமன்ற விசேட அமர்வு நாளாக அறிவிக்க பாராளுமன்ற அலுவல்கள் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 11ஆம் சரத்துக்கு அமைவாக வருடாந்தம் ஜூன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றம் கூடுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 16ஆவது சரத்துக்கு அமைவாக எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.30 க்கு பாராளுமன்றம் கூடவுள்ளது. (ஐ)

# பிரான்ஸிலிருந்து வந்த விமானம் கன்னி பயணத்தை தொடங்கியது




கொழும்பு, ஜூன் 23

சிறி லங்கன் விமான சேவைகள் நிறுவனத்தால் புதிதாக சேவையில் இணைக்கப்பட்ட எயார் பஸ் ஏ330-200 விமானம் நேற்று சனிக்கிழமை முதல் பயணத்தை ஆரம்பித்தது.

அந்த விமானம், நேற்று சனிக்கிழமை மதியம் 1.48 மணிக்கு புறப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மாலைதீவு சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தது.

இந்த விமானம், கடந்த 4ஆம் திகதி பிரான்ஸிலிருந்து கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# களுத்துறையின் அபிவிருத்திக்கு 100 கோடி ரூபாய் செலவிடப்படும்

## அமைச்சர் நளிந்த அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

களுத்துறை மாவட்டத்தின் அபிவிருத்திக்காக தற்போதைய அரசாங்கம் அடுத்த சில மாதங்களில் 100 கோடி ரூபாயை செலவிடும். அதில் 20 கோடி ரூபாயை மாவட்டத்தின் வீதி மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், இந்த ஆண்டு பரவலாக்கப்பட்ட நிதியிலிருந்து மாவட்டத்துக்குச்செயல்படுத்த ஆயிரத்து 260 கோடி ரூபாய் மதிப்புள்ள 84 திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன என்றார். அத்துடன், நாட்டின் வரி செலுத்தும் மக்களால் கருவூலத்திற்கு அனுப்பப்படும் ஒவ்வொரு வரிப் பணத்தையும் பொது சேவைக்கு திருப்பிவிடுவதே தனது அரசாங்கத்தின் ஒரே நம்பிக்கை என்றும் அவர் கூறினார். (ஐ)

# காணி உரிமையை வலியுறுத்தி ஹற்றனில் மக்கள் போராட்டம்

நுவரெலியா, ஜூன் 23

காணி உரிமை தினத்தை முன்னிட்டு ஹற்றன் நகரில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தை மலையக மக்களின் காணி உரிமை இயக்கத்தின் ஏற்பாடு செய்திருந்தது.

ஹற்றன் நகரில் ஆரம்பித்த போராட்டம் பேரணியாக பேருந்து நியைம் முன்பாக நிறைவடைந்தது.

இதன்போது, போராட்டக்காரர்கள் மலையக மக்களின் காணி உரிமையை கோரிய கோஷங்கள் பதாதைகளை ஏந்தியிருந்தனர். இந்தப் போராட்டத்தில் பல அமைப்புகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

# ஆயிரம் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 23

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதல் கட்டமாக 55 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்படுவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

இதற்காக ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# ஹெரோயினுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஜூன் 23

ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

கட்டுநாயக்கா பொலிஸ் பிரிவின் ஆண்டியம்பலம் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளத்தை சேர்ந்த 25 வயது இளைஞராவார். அவரிடமிருந்து 12 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற் றப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கிச்சூடு மூன்று பேர் கைது

கொழும்பு, ஜூன் 23

கொழும்பில் வீட்டின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கொ/ஹவலை பொலிஸ் பிரிவின் களுபோவில விகாரை வீதியில் கடந்த 15ஆம் திகதி வீடு ஒன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூடு தொடர்பில் மல்வானையை சேர்ந்த 33, 54 வயது பெண்கள் இருவரும் ரனால பகுதியை சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொஹுவலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. எம். எவ் கடனை பெறுவது இதுவே இறுதியாகவேண்டும்

## அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 23

**சர்வதேச நாணய நிதியத்தின் 4ஆம் கட்ட மீளாய்வு இடம்பெற்று வருகிறது. இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ள நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர்கள் கூட்டத்தின்போது சாதகமான பதிலை எதிர்பார்க்கிறோம். நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தை செயல்படுத்துவது இதுவே இறுதியாக இருக்க வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "சர்வதேச நாணய நிதியத்தின் நான்காம் கட்ட மீளாய்வு இடம்பெற்று வருகிறது. இந்த மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன் போது அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாணய நிதியத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

கடந்த வாரம் நாணய நிதியத்துடன் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு இணைந்து செயலமர்வொன்றை ஏற்பாடு செய்திருந்தன. இதில், நாணய நிதியத்தின் முதலாவது பிரதி பணிப்பாளர் கீதா கோபிநாத் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்றிருந்தனர். நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டை செயல்படுத்துவதில் எமது தலையீட்டை அவர் பாராட்டியிருந்தார்.

நாட்டின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் இதன் போது தெளிவுபடுத்தியிருந்தார். நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தை செயற்படுத்துவது இதுவே இறுதியாகக் காணப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

அந்த வகையில் மீண்டும் நாட்டில் அவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாவாறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதே எமது இலக்காகும். எமது ஆட்சியில் நாட்டில் இனியொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறான நெருக்கடி ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ட்ரம்பின் வரி தொடர்பில் பேச்சுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரு தரப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டால் மாத்திரமே அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அது குறித்து அறிவிக்க முடியும். பேச்சுகள் வெற்றிகரமாகவே நடைபெற்று வருகின்றன - என்றார்.

(ஐ)

# பொது மன்னிப்பை அரசு இரத்துச் செய்ய வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 23

பொது மன்னிப்பு என்ற விடயத்தை இரத்து செய்வதாக தமது கொள்கை பிரகடனத்தில் உறுதியளித்த அரசாங்கம் இதுவரையில் அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. பொது மன்னிப்பின் கீழ் சட்ட விரோதமாக விடுதலை செய்யப்பட்டவர்களும் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தவர்களும் கைது செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், தவறான முறையில் பொது மன்னிப்பு வழங்கப்படுவது குறித்து நாட்டில் பல சந்தர்ப்பங்களில் சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த வகையில் இந்த பொது மன்னிப்பு என்ற விடயத்தையே நீக்குவதாகவே தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், தற்போது ஜனாதிபதியின் பெயரில் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். பாராளுமன்றத்தில் நான் இது தொடர்பில் கேள்வியெழுப்பிய பின்னர், சிறைச்சாலைகள் ஆணையாளர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பலருக்கு இவ்வாறு சட்ட விரோதமாக விடுதலை வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. ஜனாதிபதிக்குக்கூட தெரியாமல் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்ட விரோதமாக விடுதலை செய்யப்பட்டவர்களும் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தவர்களும் கைது செய்யப்பட வேண்டும். இவ்வாறான விடுதலைகளின் பின்னர் பலரும் காணப்படுகின்ற போதிலும், ஒரு சிலர் மாத்திரம் இலக்கு வைக்கப்படுகின்றனரா என்ற சந்தேகமும் எழுகிறது. சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார்.

(ஐ)

# இஸ்ரேல்மீதான தாக்குதல்களில் இதுவரை 5 இலங்கையர் காயம்!



கொழும்பு, ஜூன் 23

இஸ்ரேல் மீது நடத்தப்படும் தாக்குதல்களில் இதுவரை 5 இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களுக்கான மருத்துவ உதவிகளை அங்குள்ள இலங்கை தூதரகம் வழங்கியுள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் கூறியவை வருமாறு,

எதிர்பாராத வகையில் மத்திய கிழக்கில் மோதல் நிலைமைகள் உக்கிரமடைந்துள்ளன. எனவே அந்த நாடுகளிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். குறித்த நாடுகளில் தொழில் புரியும் இலங்கை பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தற்போதைய நிலைமையில் குறித்த நாடுகளுக்கு தொழிலுக்காக செல்வதையும் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். உக்கிரமடைந்துள்ள மோதல் நிலைமை குறைவடையும் வரை இந்த இடைநிறுத்தம் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

இஸ்ரேலில் இதுவரையில் 5 இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர். இஸ்ரேலிலுள்ள இலங்கை தூதரகம் அவர்களுக்கான மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

அங்குள்ள இலங்கை தூதுவரும் அவ்வப்போது நிலைமைகளை அவதானித்து அவை தொடர்பில் தெளிவுபடுத்தி வருகின்றார் - என்றார்.

# கொழும்பு மாநகரை மோசடியாலேயே கைப்பற்றியது தேசிய மக்கள் சக்தி!

## முஜிபுர் ரஹ்மான் எம். பி.

கொழும்பு, ஜூன் 23


மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் மோசடியான முறையில் கொழும்பு மாநகர சபையை தேசிய மக்கள் சக்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அத்துடன், "கொழும்பு மாநகர சபையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டாலும் நாம் 54 வாக்குகளைப் பெற்றுக் கொண்டோம். பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்போம்.

அரசாங்கத்தின் டீல் அரசியல், அரசாங்கத்துக்கு பக்கசார்பாக நடந்து கொண்ட மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் மோசடியான முறையில் தேசிய மக்கள் சக்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. இதற்கு முன்னர் இரகசிய வாக்கெடுப்புகளை முற்றாக நிராகரித்த ஜே. வி. பி. இன்று மோசடிக்காக அதனை ஊக்குவிக்கின்றது. அதிகாரத்துக்காக தமது கொள்கைகளையே இவர்கள் காட்டிக் கொடுத்துள்ளனர்.

மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அரசியல் பக்கசார்பு மற்றும் சர்வாதிகார செயல்பாடுகள் தொடர்பில் எமது சட்ட ஆலோசனைக் குழு விசேட அவதானம் செலுத்தியிருக் கிறது.

அவர் முற்றுமுழுதாக உள்ளூராட்சிமன்ற சட்டத் துக்கு



முரணாகவே செயல்பட்டிருக்கின்றார். அத்துடன் பொது நிர்வாக அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டல்க ளையும் அவர் பின்பற்ற வில்லை. தன்னிச்சையாகவே அவரால் முடிவுகள் எடுக் கப்பட்டன. எனவே அவருக் கெதிராக நிச்சயம் சட்ட நடவ டிக்கை எடுப்போம். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன - என்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூறினார். (ஐ)

# இலக்க தகடு அச்சிடல் தாமதம் 15,000 வாகனங்கள் காத்திருப்பு

கொழும்பு, ஜூன் 23

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதத்தால் சுமார் 15 ஆயிரம் வாகனங்கள் இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்காக காத்திருப்பதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அச்சிடும் நிறுவனத்துக்கு பணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தால் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி முதல் இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. இருப்பினும், இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்கு புதிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 15 நிறுவனங்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூன் 23

எதிரே வந்த மோட்டார் சைக்கிளை கார் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 27 வயது இளைஞர் உயிரிழந்தார்.

பதுளை - மகியங்கனை வீதியில் இந்த விபத்து இடம் பெற்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# நிதி மோசடி குற்றச்சாட்டை மறுக்கிறார் மைத்திரிபால!

கொழும்பு, ஜூன் 23

அநுராதபுரம் எப்பாவெல பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் குற்றச்சாட்டை மறுத்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் தாம் எந்த விசாரணையையும் எதிர்கொள்ள தயார் என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி நிதியிலிருந்து 2 கோடியே 75 இலட்சம் ரூபாயை முறைகேடாக பயன்படுத்தியதாக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் அநுராதபுரம் எப்பாவெல பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் உபதலைவர் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த நிலையிலேயே முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை என தெரிவித்த மைத்திரிபால சிறிசேன முறைப்பாடு தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ளத் தயார் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தாம் எந்தவொரு ஊழல் மோசடிகளிலும் ஈடுபடவில்லை எனவும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸார் சிக்கினர்!

திருக்கோவில், ஜூன் 23

**மணல் விற்பனை செய்யும் நபரிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இரண்டு பொலிஸார் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.**

டி. சி. டி. பி. என அழைக்கப்படும் அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்ட இரண்டு பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரிகள் தன்னிடம் 25, 000 ரூபாய் இலஞ்சம் கோருவதாக அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவில் மணல் விற்பனை மற்றும் போக்குவரத்து செயல்பாட்டில் ஈடுபடும் ஒருவர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.


இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவ தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை அம்பாறை மணிக்கூட்டு கோபுரம் அருகில் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரிகளிடம் இலஞ்சப் பணத்தை மணல் விற்பனை செய்யும் நபர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறுவேடத்தில் காத்திருந்த இலஞ்சம் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள், இரண்டு பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரிகளை கைது செய்தனர்.

மேலும், அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவில் மணல் விற்பனை மற்றும் போக்குவரத்து செயல்பாட்டில் ஈடுபடும் நபரிடமிருந்து மணல் போக்குவரத்து தொழிலை எந்தப் பிரச்னையும் இல்லாமல் தொடரவும் அந்தத் தொழில் தொடர்பாக சட்டபூர்வமாக செயல்படுவதைத் தவிர்க்கவும் சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகளும் அந்த நபரிடமிருந்து 25000 இலஞ்சம் ரூபாய் கோரியிருந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பின்னர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு இரு சந்தேக நபர்களும் அழைத்து வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# திருகோணமலையில் விபத்து; இருவர் ஸ்தலத்தில் உயிரிழப்பு



திருகோணமலை, ஜூன் 23

திருகோணமலை - கண்டி பிரதான வீதி 98 ஆம் கட்டை சந்தியை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் ஸ்தலத்தில் உயிரிழந்ததாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சொந்தமான கப் ரக வாகனத்துடன் குறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் மோதுண்டதில் உயிரிழந்தனர். உயிரிழந்த இருவரும் 48, 50 வயது மதிக்கத்தக்கவர்கள் எனவும் அதில் ஒருவர் 5ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றவர் கல்மெடியாவ வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது. குறித்த வீதியின் அருகே வயல் வெளி வீதி ஊடாக தனது வீட்டுக்கு செல்வதற்கு திருப்ப முற்பட்ட வேளையில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சாரதியை தம்பலகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தே. ம. சக்திக்கு ஆதரவளித்த தமிழரசு உறுப்பினர் நீக்கம்

திருகோணமலை, ஜூன் 23

சேருவில பிரதேச சபையின் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முடிவுக்கு எதிராக இரகசிய வாக்கெடுப்பில் கலந்து கொண்டு தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினருக்கு வாக்களித்த தங்கநகர் வட்டார உறுப்பினர் கந்தசாமி சுதேஸ்குமார், கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்தும் பிரதேச உறுப்பினர் பதவியில் இருந்தும் கட்சியின் தலைமைப் பீடம் இடைநிறுத்தியுள்ளது. (எ)

# பல்கலையில் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு!

ஒலுவில், ஜூன் 23

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் ஆங்கில டிப்ளோமா கற்கையில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கான ஆரம்ப நிகழ்வு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் துணைவேந்தர் எஸ். எம். ஜுனைதீன் கலந்து கொண்டு உரையாற்றினார்.



தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 25 வருடங்களுக்கு மேலாக ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை நடத்தி வருவதாகவும் அதனூடாக பல நூறு மாணவர்கள் நன்மை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# 35ஆவது தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வு




மட்டக்களப்பு, ஜூன் 23

படுகொலை செய்யப்பட்ட ஈ. பி. ஆர். எல்.எவ் தலைவர் பத்மநாபாவின் 35ஆவது தியாகிகள் தினத்தையிட்டு "தியாகிகளின் சமாதிகளே ஆராதனைக்குரிய தேவாலயங்கள்" எனும் தொனிப்பொருளில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பில் உள்ள கட்சி காரியாலயத்தில் நடைபெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா. துரைரெட்ணம் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளருமான கோவிந்தன் கருணாகரம், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் ஞா. கஜேந்திரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், உயிர் நீத்த தியாகிகளின் உறவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட பத்மநாபாவின் படத்துக்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம், மலர்மாலை அணிவித்து பொதுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

# மாணவருக்கு கற்றல் உதவி




சம்மாந்துறை, ஜூன் 23

அவுஸ்திரேலியா - காரைதீவு மக்கள் ஒன்றியம் சம்மாந்துறை வலயத்தின் கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலய முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள், பாதணிகளையும் வழங்கியது.

ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில், ஒஸ்கார் அமைப்பின் போசகர் வே. சிவசுப்பிரமணியம் இந்தத் திட்டத்துக்கு பூரண நிதியுதவி வழங்கினார்.

இந்த நிகழ்வு , மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலய... நிகழ்வு இடம் பெற்றது. (எ)

# மு. கா. உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்



கல்முனை, ஜூன் 23

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 33 உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈரானின் 3 அணு உலைகள் மீது அமெரிக்க விமானம் தாக்குதல்

## ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

நியூயோர்க், ஜூன் 23

**ஈரானின் 3 அணு உலைகள் மீது அமெரிக்க விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். உலகில் வேறு எந்த இராணுவமும் இதுபோன்று செய்தது இல்லை. இது அமைதிக்கான நேரமாகும் எனவும் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார்.**

காஸா மீது இஸ்ரேல் ஓராண்டுக்கும் மேலாக போர் தொடுத்து வரும் சூழலில், ஈரான் நாடும் பலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், கடந்த ஆண்டு ஒக்ரோபரில் இஸ்ரேல் குடியிருப்புகளை இலக்காக கொண்டு, 200இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலும் இதற்கு பதிலடி கொடுத்தது.

இதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் தணிந்திருந்த சூழலில், திடீரென ஒப்ரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் ஈரான் மீது கடந்த 13ஆம் திகதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டது. இதனால், 2 நாடுகள் இடையே போர் பதற்றம் அதிகரித்து காணப்படுகிறது.

இதனிடையே ஈரான் தலைநகரிலிருந்து மக்களை வெளியேறும்படி அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தங்களுடைய மக்களை அறிவுறுத்தியுள்ளன. இந்த நிலையில், இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் போரில் இறங்கியுள்ளது.

இதுபற்றி ட்ரம்ப் தனது சமூக ஊடக பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். ஈரானின் பர்தவ், நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் ஆகிய 3 அணு உலைகள் மீது நாங்கள் வெற்றியுடன் தாக்குதல் நடத்தி முடித்துள்ளோம்.

ஈரான் நாட்டின் வான்வெளிக்கு வெளியே அனைத்து விமானங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பர்தவின் முக்கிய தலங்கள் மீது முழு அளவில் வெடிகுண்டுகளை கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளோம். இதனைத் தொடர்ந்து விமானங்கள் அனைத்தும் பாதுகாப்பாக நாடு திரும்பி விட்டன.

அமெரிக்காவின் சிறந்த போர் வீரர்களுக்கு வாழ்த்துகள். உலகில் வேறு எந்த இராணுவமும் இதுபோன்று செய்தது இல்லை. இது அமைதிக்கான நேரமாகும். இந்த விவகாரத்தில் கவனம் செலுத்தியதற்காக நன்றி என தெரிவித்துள்ளார். (எ)

# இன்னும் பேரழிவு தரும் பதிலடி கொடுக்கப்படும்

## ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை

டெல் அவிவ், ஜூன் 23

தாக்குதல் தொடர்ந்தால் இன்னும் பேரழிவு தரும் பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் ஜனாதிபதி பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்கள் தங்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதாக கூறி, அந்த நாடு மீது கடந்த 13ஆம் திகதி முதல் இஸ்ரேல் தாக்கி வருகிறது. ஈரானின் அணு ஆயுதத் தளங்கள் அணு விஞ்ஞானிகள் என அணு சக்தி துறையை குறி வைத்து தாக்கியது.

அத்துடன் ஈரான் நாட்டின் இராணுவ நிலைகள், எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் என பிற பகுதிகளையும் இஸ்ரேல் தாக்குதலுக்கு இலக்காக்கி வருகிறது.

இதற்குப் பதிலடியாக ஈரானும் இஸ்ரேல் மீது அலை அலையாக ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவி வருகிறது. இதில் இஸ்ரேலும் பலத்த சேதங்களை சந்தித்து வருகிறது. மத்திய கிழக்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி வரும் இந்த இராணுவ மோதல் 2ஆவது வாரத்தை எட்டியிருக்கிறது. நேற்றும் இரு நாடுகளும் தங்கள் மோதலை எந்தவித குறையும் இன்றி தொடர்ந்தன.


இந்த நிலையில், தாக்குதல் தொடர்ந்தால் "இன்னும் பேரழிவு தரும்" பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷ்கியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கூறுகையில், "எங்கள் அமைதியான அணுசக்தித் திட்டம் குறித்து நம்பிக்கையை வளர்க்க மற்றவர்களுடன் பேசவும் பணியாற்றவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆனால், எங்கள் அணு சக்தி நடவடிக்கைகளை முற்றிலுமாக நிறுத்த நாங்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டோம். இஸ்ரேல் எங்களைத் தொடர்ந்து தாக்கினால், எங்கள் பதில் இன்னும் அழிவுகரமானதாக இருக்கும்"என்று அவர் கூறினார். (எ)

# ஈரான் அணு சக்தி தளம் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

## 3 மூத்த தளபதிகள் உயிரிழப்பு



தெஹ்ரான், ஜூன் 23

ஈரானின் இஸ்பஹான் அணு சக்தி தளம் மீது இஸ்ரேல் விமானப் படை நேற்று முன்தினம் மீண்டும் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் போர் விமானங்களின் தாக்குதலில் ஈரானின் 3 இராணுவத் தளபதிகள் உயிரிழந்தனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேலின் டெல் அவிவ், ஹைபா, டான் உள்ளிட்ட நகரங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் - ஈரான் இடையே நேற்று 10ஆவது நாளாக போர் நீடித்தது. ஆரம்பம் முதலே ஈரானின் அணு சக்தி தளங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதன்படி ஈரானின் இஸ்பஹான் அணு சக்தி தளத்தை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் மீண்டும் தாக்குதல் நடத்தின. இதில் அந்த அணு சக்தி தளம் மிகக் கடுமையாக சேதமடைந்தது. (எ)

# அமெரிக்காவை நம்ப முடியாது

இஸ்தான்புல், ஜூன் 23

அமெரிக்காவை நம்ப முடியாது. அணு சக்தி தொடர்பில் அந்த நாட்டுடன் பேச்சுக்கள் நடத்தும் சூழல் இல்லை என்று ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஈரான் போர் தொடர்பில் அரபு நாடுகள் கூட்டமைப்பின் அவசர ஆலோசனை கூட்டம் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.


இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா ஏற்கனவே முடிவு செய்து விட்டது. அமெரிக்காவின் உத்தரவின்படியே ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. தற்போது அணு சக்தி தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சுகள் நடத்த அழைப்பு விடுக்கப்படுகிறது.

அமெரிக்கா நம்பிக்கை துரோகம் செய்கிறது. அந்த நாட்டை நம்ப முடியாது. கண்துடைப்புக்காக பேச்சுக்களுக்கு அமெரிக்கா அழைக்கிறது. கடந்த சில மாதங்களாக அமெரிக்காவுடன் நாங்கள் பேச்சுக்கள் நடத்தி வந்தோம். அடுத்தகட்ட பேச்சுக்கள் ஓமனில் நடைபெறவிருந்தன. அதற்கு முன்பாக ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டது- என்றார். (எ)

# ஈரான் மீது கடும் தாக்குதல் நடத்த தயாராகும் அமெரிக்கப் படைகள்

## பசுபிக் தீவில் பி - 2 குண்டுவீச்சு விமானங்கள் தரையிறக்கம்



வாஷிங்டன், 23

பசுபிக் தீவான குவாமுக்கு அமெரிக்க பி - 2 குண்டுவீச்சு விமானங்களை நகர்த்தி வருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்கள் தங்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதாக கூறி, அந்த நாடு மீது கடந்த 13ஆம் திகதி முதல் இஸ்ரேல் தாக்கி வருகிறது. ஈரானின் அணு ஆயுதத் தளங்கள், அணு விஞ்ஞானிகள் என அணு சக்தி துறையை குறி வைத்து தாக்கியது.

மத்திய கிழக்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி வரும் இந்த இராணுவ மோதல் 2ஆவது வாரத்தை எட்டியுள்ளது.

போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் பசிபிக் தீவான குவாமுக்கு அமெரிக்க பி - 2 குண்டுவீச்சு விமானங்களை நகர்த்தி வருவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

குண்டுவீச்சு விமானங்கள் நிலைநிறுத்தப்படுவது மத்திய கிழக்கு பதற்றங்களுடன் தொடர்புடையதா என்பது குறித்த தெளிவான தகவல் வெளியாகவில்லை.

# அமெரிக்காவுக்கு பேரழிவு காத்திருக்கிறது

தெஹ்ரான், ஜூன் 23

அமெரிக்காவுக்கு பேரழிவு காத்திருக்கிறது என்று ஈரான் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானின் அணு உலைகள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியது ஈரானுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், அமெரிக்காவுக்கு முன் எப்போதும் இல்லாத வகையில் பேரழிவு காத்திருக்கிறது. அமெரிக்கா தொடங்கிய போரை நாங்கள் முடித்து வைப்போம் என கமெனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி ஈரான் தலைவர் கமெனியின் பிரதிநிதி கூறும் போது, பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளம் மீது தாக்குவோம். தாமதமின்றி உடனே தாக்குதல் நடத்த இதுவே சரியான தருணம் என தெரிவித்துள்ளார். ஆனால், ஈரான் பதில் தாக்குதல் நடத்தினால், அதனை விட அதிக பலத்துடன் நாங்கள் தாக்குவோம் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரானிய ஆதரவு பெற்ற போராளி அமைப்புகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எழுந்துள்ள சூழலில், பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மற்றும் தூதரக பகுதிகளுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஈராக் உள்ளிட்ட வளைகுடா நாடுகளிலும், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகங்களில் உள்ள தூதரகங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

ஈரானில் நிலநடுக்கம்

# அணு ஆயுத சோதனை நடத்தியதாக சந்தேகம்

தெஹ்ரான், ஜூன் 23


வடக்கு ஈரானில் உள்ள செம்னான் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5. 1 ஆக பதிவாகியதால் ஈரான் அணு ஆயுத சோதனை நடத்தியதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

வடக்கு ஈரானில் செம்னான் என்ற பகுதியுள்ளது. இந்த இடத்துக்கு தென்மேற்கே 27 கிலோ மீற்றர் தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் லேசான பாதிப்பு ஏற்பட்டது எனவும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என ஈரான் தெரிவித்தது.

செம்னான் பகுதி, ஈரானின் ஏவுகணை உற்பத்தி மையம் அருகே அமைந்துள்ளது. ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் தீவிரமாகவுள்ளது எனக் கூறி அந்த நாடு மீது இஸ்ரேல் தாக்கியதால், இரு நாடுகள் இடையே போர் மூண்டது. இந்த நேரத்தில் ஈரானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது, ஈரான் அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டதா? என்ற சந்தேகத்தை எழுப்பியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் போட்டி சமநிலை




காலி, ஜூன் 23

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி, இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்றது.

இதில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 495 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக முஷ்பிகுர் ரஹீம் 163 ஓட்டங்கள் எடுத்தார். பின்னர் தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய இலங்கை அணி 131. 2 ஓவர்களில் 485 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக பதும் நிஸ்ஸங்க 187 ஓட்டங்கள் அடித்தார். பங்களாதேஷ் தரப்பில் சுழற் பந்து வீச்சாளர் நயீம் ஹசன் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 10 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி 4ஆவது நாள் ஆட்ட நேரம் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 177 ஓட்டங்கள் எடுத்து 187 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

இந்தச் சூழலில் 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 2ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 285 ஓட்டங்கள் அடித்திருந்தபோது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. அணித் தலைவர் நஜ்மூல் ஹொசைன் ஷாண்டோ 125 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பின்னர் 296 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி 4 விக்கெட்களை இழந்து 72 ஓட்டங்கள் அடித்திருந்தபோது ஆட்டம் சமனில் முடித்து கொள்ளப்பட்டது. ஷாண்டோ ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (எ)

## பெர்லின் ஓபின் ரென்னிஸ் ரைபகினா அதிர்ச்சி தோல்வி




பெர்லின், ஜூன் 23

பெர்லின் ஓபின் ரென்னிஸ் தொடர் காலிறுதியில் ரைபகினா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

மகளிர் மட்டும் பங்கேற்கும் பெர்லின் ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானின் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா பெலாரஸின் அரினா சபலெங்கா உடன் மோதினார்.

இந்தப் போட்டி தொடக்கம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்றது. இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் இருந்தே இருவரும் மாறி மாறி புள்ளிகளை எடுத்தனர். இறுதியில் அரினா சபலெங்கா 7-6 (8-6), 3-6, 7-6 (8-6) என்ற செற் கணக்கில் ரைபகினாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)

## அரையிறுதியில் கச்சனோவ்

பெர்லின், ஜூன் 23

ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடரில் கரேன் கச்சனோவ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ள ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் கரேன் கச்சனோவ், ஆர்ஜென்ரீனாவின் தாமஸ் மார்ட்டின் எட்செவரி உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கரேன் கச்சனோவ் 6-3, 6-2 என்ற நேர் செற் கணக்கில் தாமஸ் மார்ட்டின் எட்செவரியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)

## 50 ஓட்டம் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி

பார்படாஸ், ஜூன் 23

மேற்கு இந்திய தீவுகள் அணியை வீழ்த்தி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

இதையடுத்து ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 183 ஓட்டங்கள் குவித்தது. தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக டாஸ்மின் பிரிட்ஸ் 98 ஓட்டங்கள் அடித்தார்.

தொடர்ந்து 184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 133 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது. (எ)




## விடைபெற்றார் மத்தியூஸ்




காலி, ஜூன் 23

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் அஞ்சலோ மத்தியூஸ் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் முடிவை கடந்த மாதம் அறிவித்திருந்தார். இதன்படி தற்போது நடைபெற்று வரும் பங்களாதேஷுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி முடிந்ததும் ஓய்வு பெறவுள்ளதாக கூறினார்.

இந்தச் சூழலில் இலங்கை - பங்களாதேஷ் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் முடிவடைந்தது. இந்த போட்டியுடன் மத்தியூஸ் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றார். மத்தியூஸ் ஆட்டமிழந்ததும் பங்களாதேஷ் அணியினர் அவருக்கு கைகொடுத்து பிரியா விடை கொடுத்தனர்.

எனினும் தனது கடைசி டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய மத்தியூஸ் இரு இன்னிங்ஸ்களிலும் முறையே 39, 8 ஓட்டங்கள் மட்டுமே அடித்தார். (எ)

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் இங்கிலாந்து நிதான ஆட்டம்




லீட்ஸ், ஜூன் 23

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி "அண்டர்சன்- டெண்டுல்கர்" கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தெரிவு செய்தார். இதன்படி முதல் இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 113 ஓவர்களில் 471 ஓட்டங்கள் குவித்த நிலையில் சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக சுப்மன் கில் 147 ஓட்டங்களும், ரிஷப் பண்ட் 134 ஓட்டங்களும், ஜெய்ஸ்வால் 101 ஓட்டங்களும் அடித்தனர். இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜோஷ் டங் ஆகியோர் தலா 4 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸை தொடங்கி விளையாடி வருகிறது. இதன்படி இங்கிலாந்து அணியின் சார்பில் ஜாக் க்ருவ்லி மற்றும் பென் டக்கெட் ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர். இந்த ஜோடியில் ஜாக் க்ருவ்லி 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக பென் டக்கெட்டுடன் ஒலி போப் ஜோடி சேர்ந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சீரான வேகத்தில் உயர்த்தியது. இந்த ஜோடியில் இருவரும் அரைச் சதம் கடந்த நிலையில் பென் டக்கெட் 62 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து ஒலி போப்புடன் ஜோ ரூட் இணைந்தார். இந்த ஜோடியில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஒலி போப் சதத்தை பதிவு செய்து அசத்தினார். இந்த நிலையில் இந்த ஜோடியில் ஜோ ரூட் 28 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதனைத்தொடர்ந்து 2ஆம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது. 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 49 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்கள் எடுத்தது. ஒலி போப் 100 ஓட்டங்களும், ஹாரி புரூக் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இந்திய அணியின் சார்பில் பும்ரா 3 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். இங்கிலாந்து அணி, இந்திய அணியை விட 262 ஓட்டங்கள் பின் தங்கியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலரும்

பங்கேற்று முற்று முழுதாக வடக்கு, கிழக்கில் மிகப்பெரிய அழைப்பை முன்னெடுக்கிறோம்.

எமது உறவுகளுக்காகவும் - உயிரிழந்த உறவுகளுக்காகவும் - இழைக்கப்பட்ட அநீதிக்காகவும் தமிழ் தேசமாக திரண்டு போராட்டத்தில் ஒன்றுசேர வேண்டும். இலங்கைக்கு வருகை தரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார் என்று அறிய முடிகிறது. மிக முக்கியமாக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியை மனித புதைகுழியாக அறிவிக்கவேண்டும். தொடர்ச்சியாக சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு சர்வதேசத்தின் முற்றுமுழுதான தலையீட்டுடன் அகழ்வு இடம்பெறவேண்டும்.

செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் ஈழத் தமிழர்களின் பிரச்னையை திசைதிருப்பவே மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது. வடக்கு, கிழக்கு தமிழர்கள் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, எங்கள் பிரச்னைகளையும் மனித புதைகுழிகள் தொடர்ச்சியாக தோண்டப்படும் விடயங்களையும் வெளிப்படுத்த வேண்டும் - என்றும் மாணவர் ஒன்றியம் கூறியுள்ளது. (ஐ)

## இன்று

பார்வையிடுவார் என்று அறிய முடிகிறது.

அத்துடன், நாளை செவ்வாய்க்கிழமை பிற் பகல் 4.30 மணிக்கு பாராளுமன்றில் அங்கம் வகிக் கும் கட்சித் தலைவர் களை வோல்கர் டர்க் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். தொடர்ந்து, மாலை 5.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட சந்திப்பிலும் பங்கேற்பார். இந்த சந்திப்புக்கு முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தரப்பினர், மதத் தலைவர்கள், இராஜ தந்திரிகள் என சுமார் 300 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர் நாட்டில் தங்கியிருக்கும் நாட்களில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித் ஹேரத், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ மற்றும் முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்த சந்திப்புகளை தொடர்ந்து கண்டி தலதா மாளிகைக்கு செல்லும் அவர் அங்கு வழிபடுவார். தொடர்ந்து, அஸ்கிரிய, மல்வத்துபீட மகாநாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடுவார். இதன் பின்னர், வடக்கில் யாழ்ப்பாணத்துக்கும் கிழக்கில் திருகோணமலைக்கும் பயணிப்பார். இங்கும் பல தரப்பினரை சந்தித்துக் கலந்துரையாடுவார். தனது பயணத்தின் நிறைவுநாளான வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தவுள்ளார்.

நாட்டில் சுமார் 3 தசாப்தங்கள் நீடித்த போர் கடந்த 2009ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. போர் காலப்பகுதியில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலான நீதி, பொறுப்புக்கூறல் கடந்த 15 ஆண்டுகளாக ஏற்படுத்தப்படவில்லை. இந்த நிலையிலேயே ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வருகை நிகழ்கிறது. அத்துடன், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடருக்கு முன்னோடியாக அவரின் இலங்கை பயணம் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மட்டக்களப்பில்...

ஆரம்பமாகி, தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகவே இன்று மாலை 6 மணிக்கு மட்டக்களப்பில் தீப்பந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. கோட்டைக் கல்லாறு பாலம் அருகே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவாக கிழக்கில் நடக்கும் தீப்பந்தப் போராட்டத்துக்கு அனைவரையும் ஒன்றிணையுமாறு இரா. சாணக்கியன் எம். பி. அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

## கஞ்சா

ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் குறித்து பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு கிலோ கஞ்சா கலந்த மாவா பாக்கு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## எரிபொருள்...

நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஹார்முஸ் நீரிணை என்பது பாரசீக வளைகுடாவை ஓமான் வளைகுடா, அரேபிய கடலுடன் இணைக்கும் ஒரு குறுகிய கடல் வழிப் பாதையாகும். இது உலக எரிசக்தி வர்த்தகத்தில் பெரும் முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. இந்தக் குறுகிய நீர்வழிப்பாதை சுமார் 21 மைல் பரப்பளவையும் இரு மைல் அகல கப்பல் வழித்தடங்களையும் கொண்டுள்ளது. உலகின் எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் 26 சதவீத போக்குவரத்து இந்த வழித்தடத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், இந்த பாதையில் நடைபெறும் எரிசக்தி வர்த்தகத்தில் ஏற்படும் எந்தவோர் இடையூறும் சர்வதேச எரிசக்தி சந்தையில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சர்வதேச எரிசக்தி அமைப்பு கூறியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## எதிர்க்கட்சிகளின்..

- என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், எந்தவொரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லாத 95 உள்ளூராட்சி மன்றங்களில் 53இல் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி கட்டுப்பாட்டை பெற்றுள்ளது. இந்த 53 சபைகளில் 22இல் மட்டுமே ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரத்தைப் பெற்றுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## வலுசக்தி

வலுசக்தியை உற்பத்தி செய்யமுடி யும். இது அதிக செலவில் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் நாடு தங்கியிருப்பதை குறைப்பதற்கும் சூரிய சக்தி, காற்று மூலமான வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவும்" என்று உலக வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், "இந்த செயல்திட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள குடும்பங்களுக்கும் வணிகங்களுக்கும் குறைந்த விலையில், தீங்கற்ற மின்சாரத்தை விநியோகிக்க முடியும். இந்த இலக்கை யதார்த்தபூர்வமாக அடைந்து கொள்வதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்துடனும் தனியார் துறையினருடனும் இணைந்து பணியாற்ற நாம் தயாராக இருக்கிறோம்" என்று மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் டேவிட் சிஸ்லென் தெரிவித்துள்ளார். (ஐ)

# நீதி கோரிய போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவளிக்குக!

## தமிழ் அரசு கட்சி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23


அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழிக்கு நீதி கோரிய போராட்டத்துக்கு தமிழ் அரசு கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. அத்துடன், அனைவரையும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு அந்தக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"அரியாலை சித்துப்பாத்தி புதைகுழி ஆய்வு தொடர்பாக உண்மை கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என 'மக்கள் செயல்' என்ற தன்னார்வ இளையோர் அமைப்பு ஏற்பாடு செய்திருக்கும் 'அணையா விளக்கு' மூன்று நாள் கவனவீர்ப்பு போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கும் முகமாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் யாவரும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 09.30 முதல் நண்பகல் 1.30 மணி வரை கலந்து கொண்டு எமது கட்சியின் ஆதரவை தெரிவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகையின் போது காணாமல் ஆக்கப் பட்டோருக்கான நீதியை வலியுறுத்திய இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் நாம் ஒன்றிணைவது அவசியம் - என்றுள்ளது.

# வவுனியா மாநகர உறுப்பினரின் முன்மாதிரியான செயல்பாடு!



வவுனியா, ஜூன் 23

வவுனியாவில் நேற்றைய தினம் 18 மணித்தியாலங்கள் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இவ்வாறு, தண்ணீர் விநியோகம் தடைப்பட்ட பகுதிகளுக்கு வவுனியா மாநகர சபை உறுப்பினர் ஒருவர் தனது சொந்த நிதியில் வாகனத்தை கூலிக்கு அமர்த்தி தண்ணீர் விநியோகித்துள்ளார். அவரின் இந்த செயல் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

வவுனியா மாநகர சபையின் பண்டாரிக்குள வட்டார உறுப்பினரான சி. பிறேமதாஸ் என்பவரே இவ்வாறு தண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டிருந்தார்.

நேற்றைய தினம் வவுனியா நகரின் மன்னார் வீதி, குருமன்காடு, நகரசபை விடுதி, அரச விடுதி பகுதிகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

இதனால் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், அரச விடுதிகள், வீடுகள் என்பவற்றில் தமது அன்றாட செயல்பாடுகளுக்கு தண்ணீரை பெற்றுக் கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையிலேயே குறித்த உறுப்பினர் பவுஸர் மூலமாக தண்ணீரை விநியோகம் செய்தார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தண்ணீர் விநியோக குழாயில் வெடிப்பு ஏற்பட்டதால் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வோல்கர்

நல்லிணக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பு குறித்த நேர்மையை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புவதால் மனித உரிமைகள் ஆணையாளர் மக்களை சந்திப்பதற்கும் அனைத்து இடங்களுக்கும் செல்வதற்கும் எந்த தடையும் விதிக்கப்போவதில்லை", என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நிர்வாகத்துக்குள்...

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் இட்ட பதிவில்,

"ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் நிர்வாகத்தில் முழு குழப்பம் இருப்பதாகத் தெரிகிறது. 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனது அரசாங்கம் 9.6 கோடி அமெரிக்க டொலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்ததாக ஜனாதிபதி ஆரம்பத்தில் கூறியிருந்தார். ஆனால், அவரின் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி அந்த எண்ணிக்கை 65 கோடி அமெரிக்க டொலர்கள் என்று கூறினார்," என்று அவர் கூறினார்.

"பின்னர் ஜனாதிபதி தனது அறிக்கையை மாற்றி இந்த ஆண்டில் இலங்கை தனது அரசாங்கம் 460 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டு திட்டங்களை ஈர்த்துள்ளதாகக் கூறினார். இருப்பினும், இந்தத் தொகை இன்னும் நாட்டுக்குள் நுழையவில்லை. இந்த முரண்பாடான அறிக்கைகள், ஜனாதிபதி முழுமையான குழப்ப நிலையில் இருக்கிறார் என்றும் தனது சொந்த நிர்வாகத்துக்குள் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியாது என்றும் தெரிவிக்கின்றன."

"ஜனாதிபதி தன்னையும் நாட்டையும் குழப்பிக் கொள்வதற்கு பதிலாக, தகவல்களை சரியாக பெற்று, ஏற்கனவே வந்துள்ள மற்றும் இன்னும் நிலுவையில் உள்ள அந்நிய நேரடி முதலீடுகள் இரண்டையும் தெளிவாகப் பிரித்து வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## ஜப்பானின் பாதுகாப்பு உதவி இலங்கைக்கும் கிடைக்கிறது

ரோக்கியோ, ஜூன் 23

இந்த ஆண்டில் ஜப்பானிய அதிகாரபூர்வ பாதுகாப்பு உதவி திட்டத்தின் கீழ் பாதுகாப்பு உதவி பெறும் 8 நாடுகளில் இலங்கையும் அடங்குவதாக ஜப்பான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடல்சார் கண்காணிப்பு மற்றும் அனர்த்த மீட்பு திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த உதவியில் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்களும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

இலங்கையை தவிர, குறித்த பட்டியலில் தாய்லாந்து, டோங்கா, கிழக்கு திமோர், இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூகினி மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வளர்ந்து வரும் இராணுவ உறுதிப்பாடு காரணமாக இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பாதுகாப்பு பதற்றங்களுக்கு மத்தியில், பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்துவதில் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளை ஆதரிப்பதற்காக, ஜப்பான் 2023 ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்த உதவி திட்டத்தை ஆரம்பித்தது.

ஜப்பானின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் இந்த உதவி திட்டத்துக்காக 5.6 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குற்றச்சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூன் 23

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - ஹேனவத்தை பகுதியிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபர் மல்வானை, யபரலுவ பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவராவார். சந்தேக நபரிடமிருந்து 02 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபருக்கு எதிராக மஹர நீதிமன்றம் 8 பிடியாணைகளை பிறப்பித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## துப்பாக்கியுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஜூன் 23

உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலநறுவை - அரலகங்வில பகுதியில் வைத்தே சந்தேகநபர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கைதின் போது 26 வயது நபரே கைதானார்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நவீன துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 23

பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் ரிப்பீட்டர் துப்பாக்கி, அதற்கான தோட்டாக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - ஜா - எல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்தானை பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எக்கலை பகுதியை சேர்ந்த 47 வயது நபராவார்.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட தானியங்கி கைத்துப்பாக்கி, மெகசின்கள், 30 தோட்டாக்கள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிப்பீட்டர் துப்பாக்கி, அதற்கான 10 தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

# ஒப்பந்த சான்றிதழை பெறுவது கட்டாயம்!

கொழும்பு, ஜூன் 23

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடும் அனைத்து இலங்கையர்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதற்கு முன்பு அந்தந்த நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்திடமிருந்து தங்கள் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களுக்கான சான்றிதழைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.**

இது, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் என்று அறிவித்துள்ளது.

அதங்கமைய சவுதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான், இஸ்ரேல், ஜோர்தான், லெபனான், மாலைத்தீவு, மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு குடிபெயரும் தொழிலாளர்களுக்கு இந்த கட்டாய தேவை பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, புறப்படுவதற்கு முன் ஒப்பந்த வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மையை உறுதி செய்வதன் மூலம் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், தொழில்முறை பிரிவுகளில் சுயதொழில் செய்வதற்காக பயணிக்கும் தனிநபர்களுக்கு இந்தத் தேவை பொருந்தாது. இது புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்று பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# “சட்டவிரோத சொத்து குவிப்பு; சேறுபூசலில் ஈடுபடாதீர்கள்!”

கொழும்பு, ஜூன் 23

சட்டவிரோத சொத்து குவிப்பு தொடர்பில் சேறுபூசல்களில் ஈடுபட வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

சொத்து குவிப்பு தொடர்பிலான விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார். எவரேனும் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை குவித்திருந்தால் விசாரணைகளை துரிதப்படுத்துங்கள்.

முன்னாள் பாதுகாப்பு பிரதானி உள்ளிட்ட பல அரசியல் முக்கியஸ்தர்கள் சட்டவிரோதமாக சொத்துகளை குவித்துள்ளனர். அவர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படவுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த பட்டியலில் எனது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், நான் எந்த வகையிலும் சட்டவிரோதமான முறையில் சொத்துகளை குவிக்கவில்லை. எமது சொத்துகள் அனைத்துமே பெற்றோர் மற்றும் பரம்பரை சொத்துகள். எனவே, வெறுமனே சேறுபூசல்கள் நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

## மின்சாரத்தால் தாக்குண்டு 5 ஆண்டுகளில் 550 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 23

கடந்த ஐந்து ஆண்டுகளில் மின்சாரம் தாக்கி 550 பேர் உயிரிழந்தனர். இதில், 120 பேர் கடந்த ஆண்டு உயிரிழந்தவர்கள் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

40 சதவீதமானோர் பயிர் பாதுகாப்பு, விலங்குகளை கொல்வதற்காக சட்டவிரோத மின் வேலிகளில் சிக்கியே உயிரிழந்தனர். இவற்றில், பெரும்பாலானவை கண்டி, பதுளை மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.

கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மின்சாரம் தாக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## பொலிஸ் சுற்றிவளைப்பில் கஞ்சா தோட்டம் சிக்கியது!

கொழும்பு, ஜூன் 23

பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் ஓர் ஏக்கரில் பயிரிடப்பட்ட 12 ஆயிரம் கஞ்சா செடிகளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை - சூரியவெவ பகுதியிலேயே இந்த கஞ்சா தோட்டம் கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கும்புக்வெவ பகுதியை சேர்ந்த 44 வயதுடையவராவார்.

மேலும், இந்த சம்பவம் குறித்து சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற 3,681 கிலோ தேயிலை சிக்கியது!

கொழும்பு, ஜூன் 23

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற கழிவுத் தேயிலையுடன் லொறி ஒன்றின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பொலிஸ் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே இந்த லொறி சிக்கியது. இதன் போது, 3,681 கிலோ தேயிலை கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேநபர் 49 வயதுடையவராவார். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## குளவிகள் கொட்டியதில் 50 மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 23

குளவிகள் கொட்டியதில் அறநெறி பாடசாலை மாணவர்கள் 50இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டை - மீதெனிய பகுதியிலுள்ள விகாரையில் நடத்தப்படும் அறநெறி பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விகாரை வளாகத்தில் பிரதான சாலையின் அருகே அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைக்கு அருகிலுள்ள கம்பத்தில் இருந்த குளவி கூட்டுக்கு மாணவர் ஒருவர் கல் எறிந்துள்ளார். இதையடுத்து, கூடு கலைந்து மாணவர்களை குளவிகள் கொட்டின.

குளவிகளால் கொட்டப்பட்ட மாணவர்கள் சிகிச்சைக்காக மீதெனிய, கட்டுவன, காரியதித்த, எம்பிலிப்பிட்டி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர். (ஐ)

## சூரிய மின்சக்தி மின்சாரத்துக்கு நிலையான கட்டணம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

இலங்கை மின்சார சபை 20 ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் சூரிய மின்சக்தி அமைப்புகளுக்கான புதிய நிலையான கட்டணங்களை அறிவித்துள்ளது.

இதன்படி 0-5 கிலோவாட்ஸூக்கு இடையிலான அமைப்புகள் ஓர் அலகுக்கு 20.90 ரூபாயை என்ற அதிகபட்ச கட்டணமாக பெறவுள்ளன. இதேபோன்று, 5-20 கிலோ வாட்ஸ் அமைப்புகள் அலகு ஒன்றுக்கு 19.61 ரூபாய் கட்டணம் கிடைக்கும்.

கிலோவாட்ஸின் அளவு அதிகரிக்கும் போது, கட்டணம் குறைகிறது. எடுத்துக்காட்டாக, 20-100 கிலோவாட்ஸூக்கு அலகு ஒன்றுக்கு 17.46 ரூபாயை பெறும், அதேநேரம், 100-500 கிலோவாட்ஸூக்கு 15.49 ரூபாய் கிடைக்கும். 500-1,000 கிலோவாட்ஸ் அதற்கு மேற்பட்ட 1,000 கிலோவாட்ஸூக்கு முறையே 15.07 ரூபாய் மற்றும் 14.46 ரூபாயை பெறமுடியும்.

இந்த புதிய கொள்கை, அதிகமான வீட்டு உரிமையாளர்கள் மற்றும் சிறு வணிகங்கள் சூரிய மின்கலங்களை நிறுவவும் நாட்டின் எரிசக்தி இலக்குகளுக்கு பங்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.